දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )


සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**


මගේ අංකය )
எனது இல )
My No. )CF/EXM/02/2022

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2022/10/ 07
Date )


# සෞඛ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார அமைச்சு
# Ministry of Health

பொது சுற்று நிருப இலக்கம் : 02 – 88 /2022

மாகாண சுகாதார செயலாளர்கள்,

பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை – கொழும்பு,

பணிப்பாளர் - இலங்கை தேசிய வைத்தியசாலை, கண்டி,

மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்

பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்

உரிய திணைக்களத் தலைவர்களும்

## இலங்கை விஞ்ஞான சேவை தரம் III ற்குரிய உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2022

இலங்கை விஞ்ஞான சேவையில் தரம் III ற்கு உரித்தான உத்தியோகத்தர்கள் தமது முதல் நியமனத் திகதியில் இருந்து மூன்று வருட காலத்திற்குள் பூர்த்திசெய்ய வேண்டிய திணைக்களப் பரீட்சையானது சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தாள் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் திகதி, இடம் மற்றும் நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

**02 தகைமைகள்**

இலங்கை விஞ்ஞான சேவையில் தரம் III ற்கு உரித்தான இதுவரை பரீட்சையில் சித்தியடையாத உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

**03 விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, "சுவசிரிபாய", கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு 2022/11/02 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"இலங்கை விஞ்ஞான சேவை தரம் III ற்குரிய உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2022" என குறிப்பிடுதல் வேண்டும். இவ்வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியோகத்தரும், விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை என்பதை நிறுவன தலைவரும் சான்றுப்படுத்துதல் கட்டாயமாகும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.110 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையொன்றையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகத்திக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.**

கவனிக்கவும் : விண்ணப்பமானது A4 கடதாசியின் இரண்டு பக்கங்களினையும் பாவித்து தயாரிக்கப்பட வேண்டும். முதல் பக்கத்தில் 01 - 04 வரையும் காணப்படுவதுடன் இரண்டாம் பக்கத்தில் 05 - 09 வரையும் காணப்படக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டும். மேற்படி மாதிரிக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**04** பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

**05** பரீட்சைக்கு அனுமதித்தல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் பரீட்சைக் குழுவின் தலைவரிடம் தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை
(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

**06** பரீட்சை திட்டம்

இப் பரீட்சையானது நிறுவன நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை வினாத்தாள், வைத்திய சேவை மற்றும் ஆய்வுகூடச் சேவை வினாத்தாள் ஆகிய இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதங்கு ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 40 புள்ளிகளை பெறவேண்டும். ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு தடவைகளில் தோற்றி பரீட்சையினை பூரணப்படுத்திக் கொள்ளலாம். **முதன்முறையாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைத்துப் பிரிவுகளிற்கும் விண்ணப்பிக்கவேண்டும்.**

**07** பரீட்சை பாடத்திட்டம்

7.1 **நிறுவன நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை வினாத்தாள்**

நேரம் 1மணி 30 நிமிடங்கள். 100 புள்ளிகள்.

வினாத்தாள் 05 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடத்திட்டம்

சுகாதாரத் திணைக்களத்தின் நடைமுறை விதிகளின் கீழ் வரும் அத்தியாயங்கள்.

அத்தியாயம் - I - நிர்வாகம் (அனைத்து பிரிவுகளும்)
அத்தியாயம் - II - தாபன அலுவல்கள் ( அனைத்து பிரிவுகளும்)
அத்தியாயம் - III - ஒழுக்காற்று நடவடிக்கைகள் (அனைத்து பிரிவுகளும்)

7.2 **வைத்திய சேவை மற்றும் இரசாயனகூட சேவை வினாத்தாள்**

இவ்வினாத்தாள் கட்டுரை வடிவிலானது. நேரம்- 02 மணித்தியாலங்கள்.07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(அ) வைத்திய சேவை

சுகாதார திணைக்களத்தின் நடைமுறை விதியில் IIம் பகுதியில் கீழே கொடுக்கப்பட்டுள்ள அத்தியாயங்கள்.

| | | |
|---|---|---|
| அத்தியாயம் - I | - | வைத்தியசாலை |
| அத்தியாயம் - II | - | வைத்தியசாலை நோயாளி |
| அத்தியாயம் - III | - | வைத்திய நிறுவனத்தின் சுகாதார நடவடிக்கை. |
| அத்தியாயம் - IV | - | உணவு |
| அத்தியாயம் - V | - | மருந்து |
| அத்தியாயம் - X | - | சட்ட வைத்திய அதிகாரி |
| அத்தியாயம் - XI | - | மருத்துவச் சான்றிதழ் |
| அத்தியாயம் - XIII | - | மருத்துவச் சபை |
| அத்தியாயம் - XIV | - | வைத்தியசாலை மற்றும் மருந்துச் சாலைகளிற்கு வருகை தருவோர். |

(ஆ) ஆய்வுகூட சேவை

சுகாதார திணைக்களத்தின் நடைமுறை விதிகளில் IIIம் பகுதியில் பின்வரும் அத்தியாயங்கள்.

| | | |
|---|---|---|
| அத்தியாயம் I | - | ஆய்வுகூட நிர்வாகம் |
| அத்தியாயம் II | - | ஆய்வுகூட சேவையினை திட்டமிடல் |
| அத்தியாயம் III | - | ஆய்வுகூடத்தினை வகைப்படுத்தல் மற்றும் தரப்படுத்தல் |
| அத்தியாயம் IV | - | ஆய்வுகூட உபகரணங்கள் |
| அத்தியாயம் V | - | ஆய்வுகூட செயற்பாட்டு பிரமாணங்கள் |
| அத்தியாயம் VI | - | மருத்துவ ஆராய்ச்சி நிறுவன சேவையாளர்களின் கடமைப் ஹபட்டியல் |
| அத்தியாயம் VII | - | மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தவிர்ந்த மருத்துவ ஆராய்ச்சிகூட சேவையாளர்களின் கடமைப்பட்டியல். |

08 பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09 தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினை தங்களின் திணைக்களத்தில், நிறுவனத்தில், பிரிவில் கடமையாற்றும் பொருத்தமான உத்தியோகத்தர்களிற்கு தெரியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இத்தகவல்களை www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

குறிப்பு : சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூல சுற்றுநிருபங்ககிடையே ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

ஷாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்) II
செயலாளருக்காக

அலுவலக உபயோகத்தின் பொருட்டு

மாதிரி விண்ணப்பப் படிவம்

## இலங்கை விஞ்ஞான சேவை தரம் III ற்குரிய உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2022

**01** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்) : ……………………………………………
……………………………………………………………………………………………

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : (தமிழில்): ……………………………
……………………………………………………………………………………………

(iv) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (I) முதல் நியமனத் திகதி : ……………………………………………………………

(II) நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி:……………………………………………………

கடித இலக்கம: ……………………………………………………………………

(III) தற்போது பெறும் வருடாந்த வேதனம் :……………………………………………………

(IV) தேசிய அடையாள அட்டை இலக்கம் | | | | | | | | | | | | |

(V) கையடக்கத் தொலைபேசி இலக்கம் | | | | | | | | | | |

(VI) மின்னஞ்சல் முகவரி :……………………………………………………………

**02** தாங்கள் இம்முறை தோற்றுவதற்கு எண்ணியுள்ள விடயத்திற்கு எதிரேயுள்ள கூண்டினுள் ( √ ) அடையாளத்தினையும், தோற்றாத விடயத்திற்கு எதிரேயுள்ள கூண்டினுள் (X) அடையாளத்தினையும் இடுக.

தாபன நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை ☐

வைத்திய சேவை மற்றும் ஆய்வுகூட சேவை ☐

**03** (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் (தமிழில்) :……………………………………………

(ஆ) தற்போது சேவை புரியும் நிறுவனம் (ஆங்கிலத்தில்) : ……………………………………

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது : மத்திய அரசின்கீழ் ☐

மாகாண அரசின் கீழ் ☐

(ஈ) அதற்குரிய மாவட்டம் : ……………………………………………………………

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9''x4'' அளவு ரூபா.110 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறைகள் இரண்டு இணைக்கப்பட்டு உள்ளதா? ……………………………………

(ஊ) i. அஞ்சல் முகவரி (சிங்களத்தில்) : ……………………………………………………

ii. அஞ்சல் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ……………………………………

**04** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ……………………………………

**05** (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ...........................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இம்முறை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| முத்திரைக்கூண்டு |
|---|

**06** விண்ணப்பதாரியின் உறுதியுரை

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா................ பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார திணைக்களத்தினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : .............................

.............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**07** சுயவிபரக் கோவையினை கையாளும் உத்தியோகத்தரின் சிபாரிசு

இவ்விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் கிடைக்கப் பெற்றது என்றும் சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இதன் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

திகதி: ...........................

......................................
கையொப்பம் பெயர்

**08** நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திரு/திருமதி/செல்வி/செல்வன்* ............................................ என்பவர்................................ உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார். ஏன்றும் அவ் உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக இல்லாத* படியால் ரூபா .......................................... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் /முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:...............................

................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

**09** பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு /விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்

திரு/திருமதி/செல்வி/செல்வன் ........................................... என்பவர்................................ உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் என்றும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூர்த்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................................

................................................
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு /விசேட பிரிவு
தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

*பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்*